# முதலமைச்சரின் சீரிய திட்டங்களில் ஒன்று ‘மகளிர் விடியல் பயணம்!’

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலுரை ... 13 ஆம் பக்கத் தொடர்ச்சி

3. சென்னை மாநகரில், தனி நபர் வாகனங்களை பயன்படுத்துவோர், பொது பேருந்துப் போக்குவரத்திற்கு மாறுவதற்கு ஏதுவாகவும், மாசுகளை குறைக்கவும், குளிர்சாதன வசதி, வைஃபை (Wi-Fi), ஜி.பி.எஸ்., கண்காணிப்பு கேமரா, அவசரகால பொத்தான் மற்றும் சொகுசு இருக்கை உள்ளிட்ட வசதிகள் கொண்ட உயர்தர பேருந்து சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படும்.
4. சென்னையில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையில், உலக வங்கியின் நிதி உதவியுடன், சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டத்தில், இரண்டாம் கட்டமாக 500 மின்சார பேருந்துகளை மொத்த செலவு ஒப்பந்த (GCC) முறையில், அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. செலவுக்கும், வருவாய்க்கும் உள்ள இடைவெளியை ஈடுசெய்ய தேவையான நிதியை அரசு நம்பகத்தன்மை இடைவெளி நிதி (Viability Gap Fund)மூலம் வழங்கும். மாநகரப் போக்குவரத்துக் கழகம், வழித்தட திட்டமிடல் மற்றும் பயணச்சீட்டு கட்டணம் வசூலித்தல் ஆகிய பணிகளையும், பேருந்து இயக்கும் ஒப்பந்த நிறுவனம், பேருந்துகளை வாங்குதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும். இதன்மூலம் மாநகரப் போக்குவரத்துக் கழகம் பயணிகளுக்கு சிறந்த சேவை தரத்தை உறுதி செய்யும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
5. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பயணக் கட்டணம் இல்லாத இதர வருவாயை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, கணினிமயமாக்கப்பட்ட சிப்பம் மற்றும் சரக்கு அனுப்புதல் சேவையை அறிமுகப்படுத்த உள்ளது. சிப்பம் (Parcel) மற்றும் சரக்குகளை முன்பதிவு செய்தல், சேமித்தல், அனுப்புதல், பெறுதல், வழங்குதல், நகர்வை கண்காணித்தல் மற்றும் குறை தீர்க்கும் மையம் ஆகிய செயல்பாடுகள் உள்ளடங்கியதாக இச்சேவை இருக்கும். பெறப்படும் சிப்பம் மற்றும் சரக்குகள், முன்பதிவு மையத்தில் சேகரிக்கப்பட்டு, சேரும் இடத்திற்கு பேருந்துகளில் அனுப்பப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.
6. பணிமனைகளில் பேருந்துகளின் வெளிப்புறங்களை சுத்தம் செய்யும் தானியங்கி பேருந்து கழுவும் இயந்திரம், அடிச்சட்டத்தை சுத்தம் செய்யும் தண்ணீர் பீச்சும் இயந்திரம் (Car Washer Unit), பேருந்துகளின் உட்புறம் மற்றும் பயணிகளின் இருக்கையை சுத்தம் செய்ய தூசி உறிஞ்சும் இயந்திரம் (Vacuum Cleaner) ஆகியவற்றை மேம்படுத்தி பேருந்துகளை சுத்தம் செய்வதால், பயணிகளின் சேவைத் தரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பேருந்துகளின் ஆயுட்காலமும் அதிகரிக்க வழிவகை செய்யும். மேலும், சுத்தம் செய்ய எடுத்துக்கொள்ளும் நேரம், தண்ணீரின் அளவு மற்றும் செலவுகள் குறைவதுடன், நாள்தோறும் அனைத்துப் பேருந்துகளையும் சுத்தமாக பராமரிப்பது மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் உதவும். இத்திட்டத்தின்கீழ் 100 பணிமனைகளில் ரூ.10.00 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.
7. பேருந்து பணிமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் அடிப்படை வசதிகளில் முக்கிய பங்களிக்கும் ஒப்பனை அறைகள் நவீன வசதிகளுடன்கூடிய சாதனங்கள், தரைகள் மற்றும் சுவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கும் உகந்த வகையில் 100 பேருந்து பணிமனைகளில் மேம்படுத்தப்படும். இதனால் பணிமனைகளில் நிர்வாகத்திற்கும், பணியாளர்களுக்கும் இடையிலான தொழில் உறவு மற்றும் பணிமனை செயல்பாட்டுத் திறன் மேம்பட பெரிதும் உதவும். இத்திட்டத்தின்கீழ் 100 பணிமனைகளில் ரூ.10.00 கோடி செலவில் ஒப்பனை அறைகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். பேருந்து பணிமனைகளில் பணியாளர்கள் பயன்படுத்தும் ஒப்பனை அறைகளை AC வசதியுடன் மேம்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தற்போது, 100 பணிமனைகளில் ரூ.10.00 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.
8. பயணிகளில் பலர், நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களுக்கு தினமும் பொதுப் போக்குவரத்து பேருந்துகளைப் பயன்படுத்தி, வேலை மற்றும் பிற நோக்கங்களுக்காக அடிக்கடி பயணிக்கின்றனர். இந்த பயணிகளின் நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் தங்கள் எல்லைக்குள் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் மாதாந்திர விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு (Travel As You Please Ticket)மூலம் எண்ணற்ற பயண நடைகளை மேற்கொள்ள விரிவுபடுத்தப்படும். இது நகர குளிர்சாதனப் பேருந்துகளுக்கு பொருந்தாது.
9. பேருந்து பணிமனைகளில் பராமரிப்பில் தொழில்நுட்ப உற்பத்தித்திறனை அதிகரிக்க, அதிநவீன உபகரணங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்துவதனால் செயல்திறன் மற்றும் தரம் மேம்படுவதன்மூலம் தடையற்ற பேருந்து சேவையினை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தொழில்நுட்ப பணியாளர்களின் வேலை பளு குறைவதுடன், பாதுகாப்பான பணி சூழலை மேம்படுத்த பெரிதும் உதவும். இத்திட்டத்தின் கீழ் எட்டு பணிமனைகளில் ரூ.8.4 கோடி செலவில் அதிநவீன உபகரணங்கள் அமைக்கப்படும்.
10. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கி வருகின்ற அரசு தானியங்கிப் பணிமனைகள், நவீன ரக வாகனங்களையும் பராமரிக்கும் வகையில், அரசு தானியங்கி பணிமனைகளை நவீன மயமாக்கிடவும், மேம்படுத்திடவும் முடிவு செய்யப்பட்டு, இரண்டாம் கட்டமாக மதுரை, கோவை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளில் ரூ.53 இலட்சம் செலவில் நவீன மயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் பணிகள் மேற்கொள்ளப்படும்.
11. அரசு தானியங்கி பணிமனை இல்லாத இடங்களில், அரசுத் துறை வாகனங்கள் தங்களின் பராமரிப்புப் பணிக்கென அருகிலுள்ள மாவட்டங்களில் இயங்கும் அரசு தானியங்கி பணிமனைகளில், அனுமதித்து பணி மேற்கொண்டிட எரிபொருள் செலவும் கால விரயமும் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் அரசு நடமாடும் பணிமனைகள் இயங்கி வருகின்றன. அதன்படி திருப்பூர் மாவட்டத்தில் இயங்குகின்ற அரசுத் துறை வாகனங்களை பராமரித்திட, அரசு நடமாடும் பணிமனை (Mobile Workshop) ஒன்று கோயம்புத்தூர் அரசு தானியங்கி பணிமனையில், ரூ.21.35 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.
12. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில், அரசுத் துறை ஓட்டுநர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளித்திட, ஓட்டுநர் பயிற்சி மையங்கள் அரசு தானியங்கிப் பணிமனை, மதுரை, திருச்சி மற்றும் சேலத்தில் இயங்கி வருகின்றன. முதற்கட்டமாக அரசு தானியங்கி பணிமனை, மதுரையில் புத்தாக்க பயிற்சிபெறும் அரசுத் துறை ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.44 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்**

13. நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களில் குறிப்பாக கேரளா, கர்நாடகா, ஒடிஷா, மத்தியப் பிரதேசம், மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் வாகனத் தொகுப்பாளர்களுக்கான விதிகள் / வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதே போன்று தமிழ்நாட்டிலும் வாகனத் தொகுப்பாளர்களுக்கான விதிகள் இயற்றப்பட்டால் பயணிகளின் நலனைப் பாதுகாப்பது மட்டுமின்றி, ஓட்டுநர்கள், வாகன உரிமையாளர்கள், வாகனத் தொகுப்பாளர்கள் ஆகியோரின் நலன்கள் பாதுகாக்கப்படும். இதற்காக விரைவில் வாகனத் தொகுப்பாளர்களுக்கான விதிகள் வகுக்கப்படும்.
14. தற்பொழுது வாகன முன்பதிவு எண்கள் முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்கிற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்நடைமுறையை மாற்றி, வாகன முன்பதிவு எண்களை வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய ஆன்லைன் முறையில் ஏலம் விடும் நடைமுறையை அறிமுகப்படுத்துவதன்மூலம் அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்.
15. மாநிலத்திற்கான சாலைப் பாதுகாப்புக் கொள்கை 2007-ம் ஆண்டில் வகுக்கப்பட்டது. தற்போதைய சவால்களையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு மாநிலத்திற்கான புதிய விரிவான சாலைப் பாதுகாப்புக் கொள்கை மற்றும் அனைத்து சார்புத் துறைகளுக்கான செயல்திட்டம் வகுப்பதற்காக, நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் கண்டறியப்படும். இதற்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
16. தற்போது விபத்து நிவாரண விண்ணப்பங்களுக்குரிய நிவாரணத் தொகையை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், செயல்முறையை எளிமைப்படுத்தவும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், உரிய காலத்தில் முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் நிவாரணத்தை உரியவருக்கு வழங்குவதற்கென ஒரு புதிய செயலி ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.
17. பெரும்பாலான போக்குவரத்து வாகனங்கள் அதிகப்படியான ஒலி எழுப்புவதாக புகார்கள் வருகின்றன. சிறப்புச் சோதனைகளில் காற்று ஒலிப்பான்மூலம் எழுப்பப்படும் ஒலி மாசுக்காக வழங்கப்படும் சான்றிதழ் குறித்த சச்சரவுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வு காணும் விதமாகவும், இதனை நீதிமன்றத்தில் ஒரு சான்றாவணமாக சமர்ப்பிக்கவும், மாநிலத்தில் உள்ள அனைத்து கள அலுவலர்களுக்கும் ரூ.76.50 இலட்சம் மதிப்பீட்டில் அச்சுப்பொறி (Printer) வசதியுடன்கூடிய 255 ஒலி அளவிடும் கருவிகள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலுரையாற்றினார்.

## போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலன் காக்க விரைவில் ஒப்பந்தப் பேச்சு வார்த்தை

---

### ஏலகிரி மலையில் துணை மின் நிலையம் ஏற்படுத்துக!

# திருப்பத்தூர் - நாட்றம்பள்ளி சாலையை அகலப்படுத்திடுவீர்!

### சட்டப்பேரவையில் க.தேவராஜ் வலியுறுத்தல்!

**சென்னை, ஜீன் 29-**

**திருப்பத்தூர் (புதுபேட்டை வழியாக) நாட்றம்பள்ளி நெடுஞ்சாலையை அகலப் படுத்திட நடவடிக்கை எடுக்கும்படி பேரவையில் திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளரும் ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜ் வலியுறுத்தி உள்ளார்.**



அவர் பேசியது வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க ஆவன செய்த தமிழ்நாடு முதல்வரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களுக்கும், பரிந்துரை செய்த பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாவட்ட நீதிமன்றம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களுக்கும், செய்த பொதுப்பணித்துறை மற்றும் பரிந்துரை செய்த நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி, நாட்றம்பள்ளி அடுத்த பச்சூர் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்து கொடுத்த தமிழ்நாடு முதல்வரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களுக்கும், பரிந்துரை செய்த பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும், உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் ஜோலார்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கெஜல்நாயக்கன் பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

அச்சமங்கலம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகரம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கதிரிமங்கலம் ஊராட்சியில் உள்ள கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தி தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

கந்திலி ஒன்றிய அலுவலகத்தைவேறு இடத்திற்கு இடமாற்றம் செய்து, புதிய கட்டிடம் கட்டித் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கந்திலி பகுதியில் மாம்பழத்தை பதப்படுத்த மாம்பழ தொழிற்சாலை அமைத்து தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

கந்திலியை தலைமையிடமாகக் கொண்டு, கந்திலியை புதிய தாலுகாவாக பிரித்து தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில், அவசரசிகிச்சை பிரிவு ஏற்படுத்தி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளின் ஊட்டியாம் ஏலகிரி மலையில் உள்ள 14 குக்கிராமங்களை இணைக்கும் வகையில் ரிங் ரோடு அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய விளை பொருட்களுக்கான வர்த்தக மையம் (TRADE CENTER) அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பால் பதப்படுத்துதல் நிலையம் அமைத்தது தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியில் சிறு தொழில்கள் மற்றும் பெண்கள் சுய வேலை வாய்ப்பு மேம்படுத்த, கைவினை பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி மையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியில், வேளாண்மை அறிவியல் நிலையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையும் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை ஊராட்சியில், புதிய துணை மின் நிலையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியில் அமைந்துள்ள சிறு விளையாட்டு

அரங்கத்தில், உள்விளையாட்டு அரங்கம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையை, கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்தி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை நகரத்தில், புதியதாக நகரப்புற மருத்துவமனை அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை நகரத்தில், தேசிய நெடுஞ்சாலையின் இரு புறமும், சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மழை நீர் வடிகால் கால்வாய் அமைத்துத் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி தொகுதியில், பட்டு வளர்ச்சி மற்றும் மையம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூரில் இருந்து புதுப்பேட்டை வழியாக நாட்றம்பள்ளி வரை செல்லும் நெடுஞ்சாலையை அகல படுத்தி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தனவூர் வழியாக கோட்டூர், நிலவூர், பாடனூர், புத்தூர் வழியாக தாயலூர் வரை செல்லும் 7 கிலோ மீட்டர் பஞ்சாயத்து சாலையை, நெடுஞ்சாலைத்துறைக்கு மாற்றம் செய்து, அதை முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சாலை பணியினை மேற்கொண்டு, அதை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி தொகுதியில் 60 ஆண்டு கால கோரிக்கையான, கொத்தகோட்டை ஊராட்சியில் இருந்து இருந்து நெக்கனாமலை வரை வனத்துறைக்கு சொந்தமான சுமார் 7 கிலோமீட்டருக்கு தார்ச் சாலை அமைத்து, அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மேல் நிறைவேற்றி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும், ஏலகிரி மலையில் ஒரு துணை மின் நிலையம் அமைத்து தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியில் உள்ள பாச்சல் ஊராட்சியில் சுமார் 25 ஆயிரம் மக்கள் தொகை உள்ளதால், பாச்சல் ஊராட்சியை, பேரூராட்சியாக தரம் உயர்த்தி தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### புதுடெல்லியில் கடும் மழை

## விமான நிலைய முகப்புக் கூரை இடிந்து விழுந்தது! 3 பேர் பலி!

புதுடெல்லி, ஜூன் 29–

சூறைக்காற்று, மழை காரணமாக புதுடெல்லி சர்வதேச விமான நிலையத்தின், முதல் முனையத்தில் உள்ள முகப்பு கூரை திடீரென இடிந்து விழுந்தது. மேற்கூரை இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 4 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்கூரை இடிந்து விழுந்ததால், பயணிகள் அதிர்ச்சியடைந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள காவல் துறையினர் மற்றும் தீயணைப்புத் துறையினர் மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.

தலைநகர் டெல்லியில் நள்ளிரவு முதல் பலத்த காற்றுடன் கனமழை பெய்துள்ளது. டெல்லி என்.சி.ஆர், கோவிந்த்பூரி, நொய்டா செக்டார் உள்ளிட்ட பகுதிகளில் கொட்டித் தீர்த்த கனமழையால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. சில இடங்களில் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கியுள்ளது. சாலைகளில் ஆறு போல் ஓடும் மழைநீரால் வாகன ஓட்டிகள் கடும் அவதியடைந்துள்ளனர். ஏராளமான வாகனங்கள மழைநீரில் சிக்கி சேதமடைந்துள்ளன. இதனால், டெல்லி முழுவதும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

---

### லண்டன் செந்தில்குமார் வரவேற்புரை:

## லண்டன் மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா !

### ‘தமிழ்கேள்வி’ செந்தில்வேல் சிறப்புரை!

லண்டன், ஜூன் 29-

லண்டன் மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகிறது. இதில் ஊடகவியலாளர் ‘தமிழ் கேள்வி’ செந்தில்வேல் சிறப்புரையாற்றுகிறார்.

லண்டன் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் சார்பில் லண்டன் ஈஸ்ட் ஹாம், நமஸ்தே இந்தியா உணவகத்தில் இன்று (29.06.2024) மாலை 6 மணிக்கு லண்டன் செந்தில் குமார் வரவேற்புரையில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வு நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ஊடகவியலாளர் ‘தமிழ்கேள்வி’ செந்தில்வேல் சிறப்புரை ஆற்றுகிறார். பக்தவச்சலம் நன்றியுரை கூறுகிறார்.


நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை NRTIA LONDON முத்தமிழறிஞர் கலைஞர் பண்பாட்டு மைய நிர்வாகிகள் செய்துள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந.உ. சிவசாமி

### ஜூன் 29 (2023)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

மாவட்ட பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.